*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 23TH JANUARY, 1981 No. 4

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland : Rs. 35/- per year.

*Apply to :*

**The Manager,** 'Morning Star', VADDUKODDAI.

## Church News from abroad

**Visit of Nuclear Warship**

Christians in New Zealand registered a strong protest recently over the visit to Wellington of the U. S. Nuclear Warship 'Truxton.'

The N.C.C. General Secretary in New Zealand wrote to the Prime Minister saying that the visit of "Truxton" extends New Zealand's unnecessary involvement in Nuclear Weapons systems and implicates NZ in the possibility of Nuclear War.

**Sunday School Text Books Censored**

The Government of Taiwan has censored this year the Presbyterian Church's Sunday School text books on the theme of " Christian Living ".

The 'pirating of books' is one of Taiwan's thriving industries.

**Year of the Disabled (1981)**

It is estimated that there are more than 500 million disabled persons in the World, the figure increasing by 3 million a year. Ten percent of the population of each country suffers from one incapacity or another.

The United Nations has declared 1981 as The International Year of Disabled Persons.

*IN BRIEF*

**Open University in Sri Lanka**

Self-Management, Technology, Mathematics, Social Science, Physics and Chemistry will be the *six* courses to be started at the Open University from April this year.

There will be one teacher for every 20 students. The initial enrolment will be 300 students. The Self-Management Course will be for two years with Rs. 300 as the Fees. The Fees for other courses will vary. The admission Fee is Rs. 50.

**Cheapest in South East Asia**

The Colombo North Private Medical College's Fees of Rs. 67,500 for the entire M. B. B. S. course is the cheapest in South East Asia, according to Dr. Karo, Indonesea's Deputy Director of Community Health.

Medial education, being oriented to the country's needs was one reason why there was no problem of the exodus of doctors in Indonesea.

**Family Planning in the North**

Dr. (Miss) Siva Sinnathamby, Consultant on Family Planning to the Ministry of Plan Implementation has been in Jaffna to instruct the surgeons handling sterilisation in the three Government hospitals, Jaffna, Tellippalai and Pt. Pedro.

According to her, there is a distinct swing among the residents in the North in favour of family planning.

**Three A/L Examinations in 1981**

The first A/L Examination will be held in April for those following *the Old Syllabus*. The other two A/L Examinations will be in August for those following *the Interim Syllabus* and *the New Syllabus*. Some 250,000 will appear for these examinations.

Students who sat the A/L (April) Examination of 1980 will be allowed to send their application within 14 days of the release of the April 1980 results.

**New Survey of Church Membership**

Eighteen per cent of the total adult population of England are Church members. Eleven percent go to Church on Sunday.

The mainstream Churches show a decline in membership and attendance, while the Pentecostal Independent and African - West Indies Churches show an increase.

## Appointments Vacant

1. *Lecturers in Electrical Engineering*
2. *Lecturers in Mechanical Engineering*

Graduates or those awaiting results can apply. Salary scale Rs. 850/- to 1,450/- per mensum.

The Institute pays all allowances usually paid by Govt. Depts. and State Corporations including Professional allowances and marriage allowances.

Second Class Honours Graduates will in addition be paid 50% of their basic salary and Graduates 20%.

*Apply to :*

**Director,**
Jaffna College Technical Institute,
Vaddukoddai.

## IN MEMORIAM

IN AFFECTIONATE AND EVER LOVING MEMORY OF

**Dr. H. R. S. Williams**

who departed from this world on 2nd February, 1961.

*A life well spent*
*Safe in the arms of Jesus.*

Remembered by her cousins
**Mr. & Mrs. M. S. Thambithurai**
4, Old Park Road,
Jaffna.

## The Ceylon Transport Board

The Sri Lanka Central Transport Board is saddled with an enormous loss of over 1,100 million last year. Even with the increase in bus fares, only 50 per cent of the loss will be covered.

The following is a comment by Mr. C. Loganathan on the CTB losses :—

" It is accepted beyond doubt that a CTB bus does not require more than four people to handle it, but the actual number of persons now involved in servicing a CTB Bus is nine. Five persons, therefore, are being paid for not even adding value to the services rendered to the commuter. "

*Church of England*

## Race Relations Official at National Level

For the first time, the Church of England has appointed a full time paid official to look after race relations at the national level.

*Rev. Kenneth Leech*, well known for his work in London's East End and among drug adicts in Soho has been appointed field officer to the Board of Social Responsibility with the task of developing race relations work in England's 43 Anglican Dioceses.

For the past year Mr. Leech has been field officer for the Community and Race Relations Unit of the British Council of Churches.

*Obituary*

## Nallammah Acca of Uduvil Girls' College

The death occurred after a brief illness late in the evening of the 5th of January at the McLeod Hospital of Nallammah Acca — Miss Ambalavanar, matron of Uduvil Girls' College. After a brief service at her home in Sanguvelly, the body was removed to the College hall at 3 p. m. the following day. From then on staff, students, old girls and friends from all walks of life called to pay their respects to one who for years and years served Uduvil so faithfully and conscientously. An all night vigil was kept by staff, students and old girls who took turns to sit round and sing sacred songs.

The funeral service was conducted the following morning at 8 o'clock by Rev. N. W. G. Sugunarajah and tributes were paid by Mrs. Somasundaram, Mrs. Siron Rajaratnam and Mrs. Leela Ganeshan representing the College, old girls Jaffna branch, and Colombo branch respectively. Rev. D. R. Ambalavanar in his sermon, spoke of her fortitude and dedication she put into her service, and very truly and aptly touched on Nallammah Acca's selfless devotion giving her best to the institution. Her duty he said was to see that all was well, while choosing to remain behind the scenes. After the singing of a hymn by the staff and students, the Bishop offered the closing prayer and pronounced the benediction. Her remains were laid to rest at the Uduvil cemetery and the commital rites were performed by the Rev. Sugunarajah and the Rev. Sam Alfred.

No more will the staff and students as they trek to the sound of the gong to the dining room see the familiar figure at the wheel chair with her watchful eyes looking lovingly at them. Uduvil Girls' College was her early and only love, 57 years of love's labour for generations of children. Nallammah Acca leaves her heart behind at the College—Farewell Nallammah Acca—God bless you —you have left us but you love us still.

— cor

*WEDDING*

## Manohararaj—Curtis

The Methodist Church, Kollupitiya was a scene of a pretty wedding on the 19th of January at 4-30 p. m. when *T. Manohararaj* Accountant, Zambia, son of Mr. & Mrs. K. E. Thambirajah led to the altar, *Dawn Curtis*, youngest daughter of the late Advocate T. K. Curtis and Mrs. Mary Curtis of Hultsdorf.

Rev. P. B. Rajasingam, former President, Methodist Church and now Secretary of the Bible Society performed the nuptial ceremony and also preached the homily. Rev. Govindarajah, Pastor of the Methodist Church, Jampettah assisted at the Service.

The couple will be leaving for Zambia shortly.

## IN MEMORIAM

IN AFFECTIONATE MEMORY OF



**Mrs. Victoria Nallammah Kathiravelu**

Departed 31st January, 1977

*Deep in our hearts*
*you will always stay*
*Loving memories of you*
*will never fade away*

Affectionately remembered and missed by your loved ones.

Parsonage,
Pandaiterruppu.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


## தாரகை ஒளி

தீதும் நன்றும் பிறர் தர வாரா — புறநானூறு.


மலர் 141 ] 23 — 1 — 1981 [ இதழ் 4


## ஞானப்பிரகாசர் தினம்

இம்மாதம் 22-ம் திகதி நல்லூர் ஞானப்பிரகாசர் சுவாமிகளின் நினைவு தினமாகும். மானிப்பாயிலே பிறந்து, மெமோறியல் ஆங்கில பாடசாலையிற் கற்று, கத்தோலிக்க குருவாகி, தம் ஆராய்ச்சிப் புலமையால் நாடு போற்ற, ஏடு போற்ற வாழ்ந்தவர் ஞானப்பிரகாசர். அன்னாரின் ஜனனத்தின் நூற்றாண்டு விழா முன்னர் யாழ்ப்பாணத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஞானப்பிரகாசர் தமிழுக்காகவும் இறை பணிக்காகவும் தம் வாழ்வையே அர்ப்பணித்தவர். நல்லூரைத் தமது பணிக்களமாகக் கொண்டு தமது இறைபணியையும் ஆராய்ச்சியையும் நடத்தினார். இவரது பணியினால் பல நூறு தாழ்த்தப்பட்ட மக்கள் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாயினர். தாழ்த்தப்பட்ட மக்கள் மீது இவர் கொண்ட பேரன்பினால் இவர் தாழ்த்தப்பட்ட மக்களின் அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்டார். சமீப காலத்தில் இவரது சுவிசேஷப் பணியைப்போல் வெற்றியளித்த பணி வேறொன்றுமே யிருக்கவில்லையென்று துணிந்து கூறலாம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் பலரைக் கிறிஸ்தவர்களாக்கியதோடமையாது அவர்களுக்கு உண்டியும் உறையுளும் வழங்கிப் படிப்பதற்கு ஊக்கமளித்து, அவர்களை அவையில் முன்னிருக்கச் செய்தார். இவர் 37 கோவில்களைக் கட்டி மூவாயிரம் பேரைக் கிறிஸ்தவர்களாக்கினார் என்று கூறுவர்.

இறைபணியில் அவர் பேருக்கமுடையவராக இருந்தாலும், தமது ஆராய்ச்சியினாலேயே உலகப் புகழ் பெற்றிருந்தார். அன்னாருடைய உருவப் படம் ஜேர்மனிய முத்திரை ஒன்றில் இடம்பெற்றதே அவரது பெருமைக்குச் சான்றாகும். இவருடைய ஆராய்ச்சி நூல்களில் சிறப்பிடம் பெற்று விளங்குவது "சொற்பிறப்பு அகராதியாகும்" (Etymological Dictionary). ஞானப்பிரகாசர் முப்பதிற்கும் மேற்பட்ட மொழிகளை அறிந்திருந்தபடியால் தமிழ்மொழியை மிகவும் ஆழமாக ஆராய்ந்தார். அவ்வாராய்ச்சி அவருக்கு ஒரு பெரிய உண்மையை உணர்த்தியது. அது என்னவெனில், தமிழ்மொழியே உலகத்திலுள்ள சகல மொழிகளுக்கும் தாயானவள் என்பதாகும். இதனையே அவர் தமது ஆராய்ச்சி நூல் மூலமாக எடுத்துரைத்தார். இதனால் அறிஞர் இவரைத் "தமிழே உலகின் தாய்மொழி என்று பறையடித் தோதிய பன்மொழிப் புலவன்" என்று கூறுவர். அன்னார் தமது சொற்பிறப்பு அகராதியை முற்றுவிக்காமலேயே இவ்வுலக வாழ்வினை நீத்தார். தாவீது அடிகளார் அன்னாரின் பணியைத் தொடர்ந்து நடத்துகின்றார்.

ஞானப்பிரகாசர், சொற்பிறப்பு அகராதியைவிட வேறு பல கட்டுரைகளையும் ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார். இந்து சமயக் கடவுளரைப் பற்றியும் வழிபாட்டு முறைகளைப் பற்றியும் அவர் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் அறிஞர்களினாலே இன்றும் போற்றப்படுகின்றன.

இவர் தமது சமயத்தை விளக்கும் அநேக சமய நூல்களையும் எழுதியுள்ளார். இதனால் ஈழத்திலே கிறிஸ்தவ தமிழ் இலக்கியம் வளருவதற்கு அவர் ஆற்றிய தொண்டு மிகப் பெரியதாகும்.

ஞானப்பிரகாசர் மறைந்துவிட்டார் அவர் வழியில் வந்த தனிநாயக அடிகளாரும் மறைந்துவிட்டார். இந்த மகோன்னத பரம்பரை மறைந்து போகாமற் காப்பது திருச்சபையின் கடமையாகும்.

### செய்திச் சிதறல்

#### சி. எல். எஸ். கருத்தரங்கு

சென்னை சி. எல். எஸ். ஸ்தாபனத்தார் வருடந்தோறும் நடாத்தும் இலக்கியக் கருத்தரங்கினை இம்மாதம் 12-ம் 13-ம் திகதிகளில் சென்னையிலுள்ள தமது தலைமைக் காரியாலயத்தில் நடாத்தினார்கள். "சாதியமும் இலக்கியமும்" என்பது இவ்வருட ஆய்வுக்கான பொருளாக அமைந்தது. இலங்கையிலிருந்து "பஞ்சமர்" நாவலின் ஆசிரியர் டானியல், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி ஆகியோர் இக்கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

### பாசறைக்காக நாடக விழா

காரைநகர்ப் பாசறையை மேலும் திருத்திச் செப்பனிடுவதற்காகப் பாசறையின் நிர்வாகக் குழுவினர் ஒரு நாடக விழாவை அடுத்த மாதம் 7-ந் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தவிருக்கின்றனர். இந்த நாடக விழாவில் வைத்திய கலாநிதி யோகு பசுபதியும், திருமதி நளாயினி பசுபதியும் சிறப்பு விருந்தினர்களாக வரவிருக்கின்றனர். நாடக விழாவில் உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி நாடகங்கள் மேடையேறவுள்ளன.

## செரம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

செரம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா ஜனவரி மாதம் 31-ந் திகதி செரம்பூர் பல்கலைக்கழகக் கல்லூரியில் (கல்கத்தா, மேற்கு வங்காளம்) நடைபெறவிருக்கின்றது. D.Th, M.Th, B.D, B.Th பட்டங்கள் பெறுவதற்குத் தகைமை பெற்றவர்கள் இப்பெருவிழாவில் தமது விருதுகளைப் பெற்றுக்கொள்வர்.

## பிரசங்க பீடப் பரிமாற்றம்

அகில உலக திருச்சபைகளின் ஒற்றுமை வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள தென்னிந்திய, மெதடிஸ்த, ஆங்கிலேய திருச்சபைகளின் மத்தியில் பிரசங்க பீடப் பரிமாற்றம் (Exchange of Pulpit) சென்ற ஞாயிற்றுக்கிழமை (18-1-81) அனுஷ்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆங்கிலேய திருச்சபை ஊழியர்கள் தென்னிந்திய திருச்சபைகளிலும், தென்னிந்திய திருச்சபை ஊழியர்கள் மெதடிஸ்த, ஆங்கிலேய திருச்சபைகளிலும், மெதடிஸ்த திருச்சபை ஊழியர்கள் தென்னிந்திய திருச்சபைகளிலும் பிரசங்கம் செய்தனர்.

## கசோரினா சீர்திருத்தம்

தென்னிந்திய யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாக வந்துள்ள கசோரினா (JICCF) பாசறையில் இப்பொழுது அநேக திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இப்பாசறைக்குச் சொந்தமாகவுள்ள நிலங்கள் வேலி அடைக்கப்பட்டுப், பாதுகாப்புச் செய்யப்பட்டுள்ளன. இப்பொழுது இப்பாசறை காரைநகர் ஊழியன் வண. T. S. பிரேமராஜாவின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றது.

## இந்திய பல்கலைக்கழகங்களில் சேரத் தகைமைகள்

சென்னைப் பல்கலைக்கழகம் சென்ற வருடத் தொடக்கம், இலங்கை A. L. பரீட்சையில் மூன்று பாடங்களிற் சித்தியெய்தியவர்களைப் பட்டதாரி வகுப்புகளில் சேர்த்துக்கொள்ள அனுமதியளித்துள்ளது. இவ்வாறு பட்டதாரி வகுப்புகளிலே சேர்பவர்கள் மூன்று வருடங்களில் தமது B. A. படிப்பையோ B. Sc. படிப்பையோ முடித்துக்கொண்டு திரும்பலாம். மதுரைப் பல்கலைக்கழகமோ, இலங்கை A. L. பரீட்சையில் 4 பாடங்களிற் சித்தியடைய வேண்டுமென்றும், அதில் ஆங்கிலம் ஒரு பாடமாக இருக்க வேண்டுமென்றும் விதித்து, இன்னும் குழப்பமான நிலையிலேயே இருக்கின்றது.

## ஞாபகார்த்த ஸ்தோத்திர ஆராதனை

யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களின் திலகமாக விளங்கிய காலஞ் சென்ற மேஜர் V. G. ஜோர்ஜ் பேரில் ஒரு ஸ்தோத்திர ஆராதனை சென்ற ஞாயிற்றுக்கிழமை (18-1-81) வட்டுக்கோட்டையில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் இராஜன் கதிர்காமர், திரு ஜிம்மி இராஜரத்தினம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். வண. S. N. சுகுணானந்தன் அருளுரை வழங்கினார்.

### நீத்தார் பெருமை

## அமரர் வெற்றிவேலு அண்ணாமலை

வீரம் விளைந்த வன்னிநாட்டின் வெற்றித் தலைவர்களில் ஒருவர் அண்மையில் அமரரான வெற்றிவேலு அண்ணாமலை அவர்கள். மூத்த தலைவர்களின் முன்னோடி அவர். இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டு அவர். தண்ணீரூற்றின் தவப்புதல்வன். முள்ளியவளையின் முதல்வர். கணுக்கேணி தந்த கடமை வீரன். கனவான்.

கொடைக்கும் குடியோம்பலுக்கும் பெயர்பெற்ற குடும்பத்தில் 1892-ல் பிறந்தார். முல்லைத்தீவில் கணுக்கேணி அவர் கிராமம். மங்களம் பொங்கும் மருத நிலம் இவர் பிறந்த பூமி. ஒழுக்கமும் கல்வியும் உயர்குடிப் பிறப்பும் இவரை உத்தமராக்கியது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்றார். சிறந்த கல்வியும் சீரிய மதிநுட்பமும் வாய்ந்த அண்ணாமலை அவர்கள் சிங்கப்பூர் சென்றார். வன்னிப்பற்றில் அந்நாட்களில் கடல் கடந்து வெளிநாடு சென்று வேலை பார்த்தவர் இவர் ஒருவர்தான். அறிவுத் திறத்தால், ஆங்கிலப் பேச்சால் சென்ற இடத்தில் சிறந்த பதவியை வகித்துப் பாராட்டும் உயர்வும் பெற்றார். பிறந்த நாட்டில் சேவை செய்ய விழைந்து தாயகம் திரும்பினார்.

முள்ளியவளைக் கிராமசபைத் தலைவரானார். பாதைகள் போட்டும், கிணறுகள் கட்டியும், வாசிகசாலை ஸ்தாபித்தும், சந்தைகள் திறந்தும் நாடு போற்ற நல்ல திட்டங்களை ஆக்கினார். முள்ளியவளைக் கிராமாட்சி மன்றத்தில் அவர் தலைமை வகித்த காலம் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கவேண்டியது. ஆற்றலும், அறிவும், அனுபவமும் வழிகாட்ட நல்ல பல திட்டங்களை ஆக்கி நாட்டு மக்கள் உயர்வுக்காக நடைமுறைப்படுத்திய அப்பெரியாரை நினைவுகூற நிறைய நினைவுச் சின்னங்கள் உண்டு.

இவரது திறமையையும், மக்களோடு பழகும் பண்பையும் கண்ட அரசாங்கம் கிராம விதானைப் பதவியை வழங்கியது. அதிகாரியாக அல்ல, நலிந்தவர்களை, ஏழைகளைக் காக்கும் தலைவனாக விளங்கினார். தேடிவந்த ஏழை எளியவர்கள் உதவியும் பணமும் பெற்று, தியாகத் தந்தையெனக் கண்ணீர் சிந்திய காட்சிகள் பலவுண்டு.

இளைப்பாறியபின் சமூகத்திற்கும் சமயத்திற்கும் சிறந்த தொண்டாற்றினார். இதனால் சமாதான நீதிபதியாக நியமிக்கப் பெற்றார். உத்தம கிறிஸ்தவரான திரு. அண்ணாமலை அவர்கள் தமது அருமை மனைவி அருளம்மாவோடு இல்லறத்தை நல்லறமாக நடத்தினார். தவப்பயனாய்ப் பிறந்த மக்கள் மூவர். பொறியியலாளர் பாலகிருஷ்ணனும், விரிவுரையாளர் பாலராணியும் ஆங்கில ஆசான் பாலமனோகரனும் புகழ் பூத்த தந்தை விட்ட பணியைத் தொடர்ந்து செய்வது வன்னிநாட்டின் அதிஷ்டமாகும்.

"அமரர் அண்ணாமலையின் ஆத்மா சாந்தி அடைவதாக."

— J. M. Selvadurai.

## வட்டுக்கோட்டை ஆலயத்துக்கு ஒலிபெருக்கி

வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்திற்குச் சென்ற வாரம் ஒலிபெருக்கி இணைக்கப்பட்டது. இதுவரைகாலமும் ஆதின சங்க நிகழ்ச்சிகளுக்குத் தற்காலிகமாக ஒலிபெருக்கிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன.

# கிறிஸ்தவ வாழ்க்கை எரிந்து பிரகாசிக்கும் வாழ்க்கை

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகில் வாழ்ந்த காலத்தில் ஒரு சிலரை மெச்சிக்கொண்டார். அவர்களுள் யோவான் ஸ்நானகன் தலைசிறந்தவனாயிருந்தான். "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் இருந்தான்.........யோவான் 5:35, என மெச்சப்பட்டான். நமது வேதாகமத்திலே கடவுள் கூறிய முதலாம் வார்த்தை "வெளிச்சம் உண்டாகக் கடவது" ஆதி. 1.3 என்பதாகக் கூறப்பட்டுள்ளது. விளக்கிற்கும் வெளிச்சத்திற்கும் தொடர்பு இருக்கும்போதுதான் விளக்கின் உபயோகம் பூரணப்படுகின்றது. அநேக வருடங்களின் முன்னே சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் ஓர் இரவு நேரத்தில் நின்றுகொண்டிருந்த புகைவண்டியை ஓடிக்கொண்டு வந்த புகைவண்டி மோதி ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது. விபத்திற்கான காரணம் ஆராயப்பட்டபோது, வெளிச்சமில்லாத விளக்கைத் தூக்கிக் காட்டியதனால் விபத்து ஏற்பட்டதென்பது வெளிப்பட்டது. வெளிச்சமேற்றப்பட்டிருந்த விளக்குக் காட்டப்பட்டிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது. நம்மிடத்திலே விளக்கு உண்டு. ஆனால் வெளிச்சம்தான் ஏற்றப்படவில்லை. வெளிச்சம் உண்டாகக் கடவது என்னும்போது நான் அறியப்படுவேனாக என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது. நாம் நமது கடவுளை அறிந்துகொண்டோமா? சிறிது சிந்திப்போம். நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்துகொண்டோமானால் அவரை எல்லாவற்றிலும் எல்லாமாயிருக்கும்படி அனுமதிக்கவேண்டும். அவர் பாவிகளாகிய நமக்காக மரித்ததினால் நாமும் அவருக்காக மரிக்கவேண்டும். அவர் தமது உடலை நமக்காகக் கொடுத்ததினால் நாமும் நமது உடலை அவருக்காகக் கொடுக்க வேண்டும்.

மெய்க் கிறிஸ்தவனை ஒரு பைத்தியக்காரன் எனலாம். அவன் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவும் இருக்கிறான். அவன் உலகத்துடன் ஒத்துப் போகமுடியாது. உலகத்தின் சூழ்நிலைக்கு அவன் பொருத்தமானவன் அல்லன். உலகத்திற்கு இசைந்து நடக்க வேண்டுமாயின் கிறிஸ்தவப் பண்பை இழக்க நேரிடும். மெய் விசுவாசி கிறிஸ்துவுக்கென்று அனல் மூட்டப்பெற்றவனாய் இருக்கிறான். இயேசுவுக்காக அவன் பேரொளி வீசித் திகழ வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை அனைய வாழ்க்கையாகும்.

கர்த்தருடையவர்கள், உலகத்தாருக்கு வித்தியாசப்பட்டவர்கள். தங்களுடைய ஆவி வேறு ஆவி என்றும், தாங்கள் தேவனுடைய புத்திரர் என்றும் சொல்லுகிறார்கள். தற்காலத்திலுள்ளவைகள் அழிந்து போகும் என்பதை உணர்ந்தவர்களாய் நீதிவாசம் பண்ணும் புதிய பூமியையும் புதிய வானத்தையும் எதிர்பார்க்கிறார்கள். விழித்திருந்து ஜெபம் பண்ணி, சுறுசுறுப்பும், பரிசுத்தமும், பொறுமையும், நன்றியறிதலும் உள்ளவர்களாய் வாழ்கிறார்கள். உள்ளது போதும் என்ற மனத் திருப்தியோடு, தாம் தெரிந்துகொள்ளப்பட்டதை நிச்சயப்படுத்தி இயேசு நடந்ததைப் போல் நடந்து, பவுலைப்போல் நித்தம் சாகிறவர்களாய்ப் பிழைக்கிறார்கள். உண்மையான கிறிஸ்தவர்கள் தாம் செல்ல வேண்டிய வானுலக வாழ்வுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க விரும்புகிறார்கள். அவர்களுடைய செய்கைகள் எல்லாம் அதற்கு ஒத்ததாக இருக்கின்றது. நற்கிரியைகளில் ஐசுவரியமுள்ளவர்களாய், இயேசுவின் வருகையை நம்பி வாழ்கிறார்கள். இயேசுவின் வருகையை நம்பி வாழ்கிறார்கள். இதனால் அனலுள்ளவர்களாகிறார்கள்.

சின்சின்டார்ப்பிரபு "என் ஒரே ஆவல் கிறிஸ்துதான்" என்று கூறியதைப் போல ஒவ்வொரு விசுவாசியும் வாழவேண்டும். அதாவது மற்றெதுவும் அவர்களுக்கு முக்கியமன்று கடவுளின் மெய்யடியார்கள் எத்தியாகத்தையும் செய்ய ஆயத்தமாயிருப்பார்கள். அவர்களுடைய பொருள், காலம் யாவற்றையும் ஏன் அவர்களையுமே மகிழ்ச்சியோடு படைப்பார்கள். இயேசுகிறிஸ்துவின் அடியார்கள் சாதாரண மனிதரைப் போன்றவர்கள் அல்லர். தங்களுடைய இயற்கைப் பண்புகளைச் சிலுவையில் அறைந்தவர்கள் வாழ்க்கையின் உரிமைகளையும், உறவுமுறைகளையும் கிறிஸ்துவுக்காகத் தியாகம் செய்தவர்கள். தங்கள் விருப்பங்களை வெளியிடாமல் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து முற்றிலும் அவருக்குத் தங்களை அடிமைகளாக்குகிறார்கள். இறைப் பற்று மிகுந்த கிறிஸ்தவன் இவ்வுலகில் ஓர் அன்னியனைப் போலவும் மேலுலகை நோக்கிச் செல்லும் வழிச் செலவை மேற்கொண்டவன் போலவும் காணப்படுகிறான்.

நண்பர்களையும், உலகப் பொருட்களையும் தேடவேண்டுமெனும் ஆவல் அவனுக்குக் கிடையாது. ஊதியமோ, இழப்போ, வாழ்வோ, மரணமோ, நாடோ, காடோ, உயர்வோ, தாழ்வோ அச்சமும் அவனுக்கில்லை. கடவுள் மேன்மையடைய வேண்டும் என்பதே அவனது ஒரே நோக்கம். கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்ப வேண்டும் என்பதே அவனுடைய ஒரே ஆவல். கிறிஸ்துவுக்காக அவன் இகழப்படலாம் ஏனெனில் அவனது வாழ்க்கை மற்றவர்களுக்குப் புரிந்துகொள்ளமுடியாத ஒரு புதிர். மற்றவர்களினால் புகழப்படும்போதும் அவன் நிலை மாறமாட்டான். கிறிஸ்துவுக்கு அவன் சாட்சி, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு கீழ்ப்படிதலோடு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவான். கிறிஸ்துவின் பாதை சிலுவைப் பாதை. கேட்டின் பாதையோ விரிவானது திரள் கூட்டம் அப்பாதையில் செல்லும்போது — கிறிஸ்தவன் சிலுவைப் பாதையைப் பின்பற்றுவான். சிலவேளைகளில் தனித்தவனாய் நடந்தாலும் — தன் கையைத் தாங்கிக்கொண்டு வழி நடத்தும் நண்பனின் சமீபத்தை உணர்ந்தவனாய் நடப்பான்.

நமது ஆண்டவர் தமது சீஷர்களை உலகத்திற்குள்ளே அனுப்பும்போது "ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன்" மத். 10:16 என்றார். அவரின் நம்பிக்கை வீண்போகவில்லை. அனுப்பப்பட்ட ஆடுகள் தங்கள் கிரியைகளை நடப்பித்தார்கள். மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை எரிந்து பிரகாசிக்கிற வாழ்க்கையாய் இருந்தது. அந்த வாழ்க்கையின் தொடர்ச்சியாய் வாழ்ந்து வரும் நாமும் நமது வாழ்க்கையின் மூலம் எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் விளங்க இறைவன் வல்லமை தருவாராக.

# கிறிஸ்துவின் அற்புதமான ஜீவியமும், அதில் அடங்கியுள்ள ஒன்பது பெரிய உண்மைகளும்

டாக்டர் ஜேம்ஸ் மேதரின் ஒரு பிரசங்கம். ஆங்கிலத்திலிருந்து, திருமதி இசபேல் அற்புதநாதன் அவர்களால் தமிழாக்கப்பட்டது

(முற்றொடர்)

V

இயேசுக்கிறிஸ்துநாதர் தமது போதனைகளிலும் ஜீவியத்திலும் அவர் 'உலகத்தை மையமாகக் கொண்டுள்ள முழு வெளிநோக்கு மிகவும் வியக்கத்தக்கது.

இயேசு யூதனாகவே பிறந்தார். யூதர் என்றுமே அன்று தொடக்கம் இன்றுவரை தம்சாதிப் பற்று உடைய மக்களே. தங்களுடைய ஜாதிக் கௌரவத்தைப் பற்றிய பெருமையும் தாங்கள் மனித வர்க்கத்தார் யாவரிலும் மேலானவர்களே என்ற எண்ணமுமுடையவர்கள். யூதரே கடவுளால் தெரியப்பட்ட மக்கள் என அவர்கள் நினைத்துக் கொண்டார்கள். இயேசு பிறந்த சமயத்தில் யூதர் தமது சுயாதீனத்தை இழந்தவராய், ரோமரால் ஆளப்படுகிறவராய் ரோமநுகத்தின் கீழ் கொந்தளித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் எங்கள் யேசுநாதருக்கு உலக மக்கள் யாவரும் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குள் பிரவேசித்து இரட்சிக்கப்படவேண்டும் என்ற நோக்கமுடையவராய் இருந்தார். 'நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்' என்று யோவான் 8:12-ல் கூறியிருக்கின்றார். யோவான் 3;16-ல் காண்கிறபடி 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்' என்பதே. மத்தேயு 5:13-ல் 'நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்', என்று கூறியிருக்கிறார். அவர் உவமைகள் மூலமே போதித்தார். விதைக்கிறவனுடைய உவமை தொடங்கிப் பல உவமைகளைக் கூறினார். மத்தேயு 13-ம் அதிகாரத்திற் காண்கிறபடி 38-ம் வசனத்தில் 'நிலம் உலகம்' என்றார். அவருடைய தரிசனங்களும் குறிக்கோள்களும் உலகத்தையே மையமாகக் கொண்டுள்ளது. மத்தேயு 13:49; மத்தேயு 24:14; மாற்கு 13:10; முதலிய வசனங்களையும் வாசிக்குக. இயேசு 'உலக இரட்சகர்'. லூக்கா 24:47; யோவான் 8:17; 4:42; 9:39; 15:18; 16:33; 17:11; 14; 18; 21; 23; 24; 25; என்ற வசனங்கள் காட்டுகின்றன. யோவான் 17-ம் அதிகாரத்திலுள்ள முழுச் செபமும் முழு உலகத்தையும் குறித்தே ஏறெடுக்கப்பட்ட ஜெபம். அவர் கடைசியாகத் தனது சீடர்களுக்கு விட்டுப் போன உத்தரவாதம். 'உலகத்திற்குள் போய் ஊழியம் செய்து தனக்கு உத்தம சாட்சிகளாயிருக்க வேண்டுமென்பதே'.

மத்தேயு 28:19—20; அப்போஸ்தலர் 1:8; கொலோசேயர் 1:23; முதலிய வசனங்களை வாசியுங்கள். ஒரு யூதன் உலக தன்மையைப் பற்றிப் பரந்த மனப்பான்மை யுடையவராயிருத்தலே ஒரு மாண்புமிகு மாட்சிமை. நல்ல சமாரியனைப் பற்றிய உவமையில் இயேசு ஒரு யூதனை அக்கதையின் கதாநாயகன் ஆக்காமல் யாவராலும் புறக்கணித்துத் தள்ளப்பட்ட நல்ல சமாரியனை உவமைக்கு ஊன்றுகோலான வீரனாக்குகிறார் அந்த உவமையிற் கூறப்பட்டது. போல யூதர்கள் அப்படி அன்புக் குறைவாய் நடந்திருக்கப்படாது என்பதே இயேசுவின் விளக்கம். இச்செய்கையை யாரால் விளக்க முடியும். சர்வதேச உலக கர்த்தாவான இயேசுவாலேயே இதைச் செய்ய முடிந்தது.

VI

இயேசு உலகரீதியான இந்த இரட்சிப்பின் வேலைக்குத் தலைவர்களாய், தனக்கு உதவியான சீடர்களைத் தெரிந்துகொண்ட விதமே இன்னுமோர் பிரமிப்பிற்குரிய காரணம்.

(1) அவர் தனக்கு உதவியாகத் தாழ்மையான மனிதர்களைத் தெரிந்துகொண்டார். அவர்களுக்கு அந்தஸ்தோ பிறப்புரிமையோ இருந்ததில்லை. மத்தேயுவைப் பார்த்தால் அவன் தனது மக்களாலேயே புறக்கணிக்கப்பட்ட ஓர் இழிவான தொழிலைச் செய்தவன். அவன் அரசாங்கத்திற்கு விரோதமாக அதாவது வேறு அரசாங்கமான ரோமருக்கு வரி வசூலிப்பவனாயிருந்தபடியால் அவனைப் புறக்கணித்தார்கள். ஆனால் இயேசுவால் தெரிந்தெடுக்கப்பட்டான். இப்படியே பேதுரு, யோவான், யாக்கோபு, அந்திரேயாஸ் முதலியோரைப் பார்த்தால் இவர்கள் பாமர மீன்பிடிகாரரே!

(2) இயேசு இப்படிப்பட்ட மக்களைத் தெரிகையில் தனக்கு மக்களுக்குரிய உயர்ந்த கல்வியிலோ அல்லது சமுதாய உயர்விலேயோ பணத்திலேயோ தாம் அக்கறையோ நம்பிக்கையோ கொள்ளவில்லை என்பதைத் தேவன் தெளிவுபடுத்துகிறார். பழைய ஏற்பாட்டுக் கதைகளை வாசிக்கையிலும் தேவன்மேல் நம்பிக்கை கொண்ட அநேகம் மனிதரைப் பற்றி யறிவோம். தாவீது இராசா 2 சாமுவேல் 22:40-ல் "யுத்தத்திறகு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி. என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர்," என்று. தேவனை ஸ்தோத்தரிக்கிறார்; இப்படியே சங். 28;8; 46:1; 73;26; 81:1; 84:5; 89:21; ஏசாயா 40:31; 41:10; தானியேல் 11:32; மீகா. 3:8 முதலிய வசனங்கள் யாவும் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்த மனுசர் கூறிய துதிகள் நம்பிக்கைகளைக் காட்டுகின்றன.

(தொடரும்)

## சினட் ஆராதனை ஒழுங்குக் குழு

சினட் ஆராதனை ஒழுங்குக் குழு (Liturgy Committee) அடுத்த மாதப் பிற்பகுதியில் பங்களூரில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் இலங்கைப் பரிசுத்தவான்கள் சிலரினது பெயர்களும் வழிபாட்டு முறைமைகளில் சேர்த்துக்கொள்ளப்பட ஆராயப்படவிருக்கின்றது. இதற்கான பூர்வாங்க வேலைகளை இலங்கை உறுப்பினர் திரு J. M. சபாரத்தினம் செய்துவருகிறார்.

*EDITORIAL*

## Contemporary Politics in Sri Lanka

In the delicately poised political situation of recent weeks in our country, one thought that is uppermost in our mind is whether as a ruling party or as the opposition, we know where we are heading.

" Patriot Pilapitiya ", has saved the country from an ugly political situation. But what would have happened if Pilapitiya did not turn 'a patriot'. A Government cannot always expect miracles to happen or always look for 'patriots' to emerge.

The Kalawana By-Election had really overtaken the pace of the Referendum Bill (passed only in October 1980). The Bill was still in the process of being "licked into shape", and awaiting the Speaker's signature on the day of the By-Election (12-1-81).

For the first time, in our political annals, an elected member would therefore have been unable to take his oaths and his 'seat' (even though the election results have been announced) in the light of the Supreme Court ruling.

The first ever *Referendum* which would have cost the country a tidy 30 million rupees was a marathon political exercise, involving some seven million eligible voters (almost half of the population of Sri Lanka).

The staggering cost was only part of the problem. The significant feature of the Referendum was that there will be no candidate, as for a General Election.

Would the voters of the country, preoccupied with their existential problems and the wherewithal for the next meal, be adequately prepared for this sophisticated exercise on a sophisticated issue ?

In this context, we are reminded of Daniel Defoe's anecdote that there were a hundred thousand stout country fellows in his time, ready to fight against 'popery', without knowing whether 'popery' was a man or a horse.

We feel constrained to make these comments, although at the surface they may seem unnecessary (in the context of the subsequent resignation of the nominated member) to underscore *one important truth.*

Democracy is not merely a difficult form of government but becomes *increasingly difficult* with a five-sixth majority and a team of over ninety ministers of state.

This is the lesson that our ruling party will have to learn from the dizzy swirl of political developments in our country, during the past few weeks, some of which developments, we should admit, did appear to over-step the boundaries of the "*Dharmista* society."

We are happy, however, that the government, despite its strength, was sensitive to the dictates of its conscience, as reflected in its decision to allow the By-election at Kalawana to be held with due deference.

We would now urge on the govenment to press on, with the setting up of the Development Councils on the success of which would eventually depend the credibility of President Jeyawardene who has committed himself to solve the *Tamil Problem* in Sri Lanka during the tenure of the present government (1977—1983).

Very little purpose, in our view, will now be served by the TULF joining hands with any other political party merely for the sake of embarassing the ruling party.

The TULF has much greater responsibilities on its shoulders than the Communist Party, for instance, and should not preoccupy itself with the false dichotomy of 'doing politics' and doing justice.

The TULF should now make a clear, unambiguous, systematic and long term *commitment* to the working of the Development Councils in this country, without compromising in any way, the "integrity" of the Tamil speaking people of Sri Lanka.

Joining Opposition groups in their demonstrations for the celebration of 'victory' over the Kalawana issue or even organising a tar brush campaign against the visitor from Tamil Nad, does not seem to us to accord with our political maturity. It is not our sadness then, that becomes *sad* but our *cheap joys.*

Both the ruling party and the TULF should finally, remember that 'means' in a democracy are as important as the 'ends' and can govern the ends or even vary it.

## Jewellery Sellers must Beware

An island-wide instruction has gone to all Jewellers by the DIG (Crime and Operations) that they should not buy jewellery from anyone who does not possess a national identity card and they should keep such jewellery bought, for seven days without melting.

A record should be kept of the seller's identity card number, and his signature.

This move follows the recent shooting of two persons and robbery of jewellery worth over 5 lakhs from a pawn broker's shop in Kurumpasiddy, a village in the Kankesanthurai Electorate.

## A Message to the Churches on Ecumenical Sharing of Resources

[ *Adopted by the Central Committee of the World Council of Churches* ]

Yet God has not abandoned His purpose of sharing. In Jesus Christ He went to the ultimate depths, sharing the death of His people, even death on the cross. By renouncing all earthly power, Christ has made room again for the poor and the powerless and calls back the rich to God's purpose from which they have gone astray, so that now in the broken body and shed blood of the crucified Christ we see the power of God and the wisdom of God.

**The call to the Churches**

Today God calls His church to be an instrument and a symbol of His sharing with His people. In the eucharist, as we celebrate the ultimate act of God's sharing with us, we are called to take the risk of abandoning power, even of dying, so that His people may have life and have it abundantly.

With repenting hearts we confess that there are many places where the Church continues to use its power and influence in a way parallel to those institutions of society which exploit and oppress. Yet we thank God for those places where the Church is rediscovering its true vocation to be the servant of the world, standing with the powerless and finding again its true power.

Too often the Churches allow themselves to be conformed to the world with all its division and dominsations — economic, political, cultural. Some parts of the Church consider themselves to be poor, while others think of themselves as rich, perpetuating the blockages which prevent true sharing.

"I know your troubles : I know that you are poor — but really you are rich". (Revelation 2 : 9). These words must be remembered by every Church thinking of itself as poor. " You say, 'I am rich and well off, I have all I need.' But you do not know how miserable and pitiful you are! You are poor, naked and blind." (Revelation 3 : 17). These words in turn must be remembered by every Church thinking of itself as rich. Every Church must struggle against the temptation to measure its resources according to the values of this world. Every Church must recognize both its poverty and its wealth according to the intention of God and His purpose of sharing.

Our wealth takes many forms. Every Church, rich or poor, needs to recognise the greatness of its wealth in being the people of God. In the sharing of people, of our ways of proclaiming the Gospel, our forms of worship, our insights into being human, we mutually enrich one another and build up one another in the fulness of Christ. It is in our "poverty" that we are open to receive from one another.

Also, every church must re-valuate those other resources entrusted to it—its financial resources, its lands, its buildings, its investments — according to the criteria of the purpose of God's sharing. Both Churches considering themselves rich and those considering themselves poor must face the fact that their fundamental sharing must be not simply with each other but with the world in all its need and agony.

*Letter to the Editor*

## The Duties of a Clergyman

On innumerable occasions, I have come across sarcastic comments from fellow members of the laity that priests have only a few hours of work in a month. The general feeling is that the clergy do not justify the stipend that they receive.

As the son of a clergyman I find this painful. I remember something of my father having to spend a fixed number of hours each day on prayer, bible reading general reading, visiting the parish (especially the sick and the old) and so on, in keeping with the rules of his Order.

The Church cannot ignore forever the complaints of her members. I shall be very thankful if you would get someone more knowledgeable than I in these matters, to write in the Morning Star on "why the Priesthood in the context of the Church, is a full-time vocation."

Yours truly.
S. R. H. Hoole

Uduvil,
14-1-81.

*India*

## An Association of Indian Christian Art

Gurukul Lutheran Theological College in India has pioneered in the establishment of an Association of Indian Christian Art, the aim of which is to encourage the production of art, reflecting Christian concerns in India.

A similar association was established in 1979 by the CCA in Japan. A Workshop for Christian artists has been an annual feature of Gurukuls' programme since 1977. The main concentration of the Workshop was in studying the Bible, in social issues and painting social themes from a Christian perspective.

## Personal

Mrs. C. G. Canagasundaram of Barr Lane, Tellippalai, a Senior member of the Tellippalai Church, has left for New Zealand to join her son Dr. Richard Canagasundaram and his family.

The Women's Centre at Maruthanamadam with which she was associated closely for over three decades accorded her a Valedictory on 18-1-81.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./8920/79.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 23rd January, 1981.